## மேட்டூர் சார்பு நீதிமன்றம்

| O.S. No. 277/2014 | Date : 20.06.2023 | PW1 |
|---|---|---|
| Name: மதியழகன் | S/o. அபிமன்னன் | |
| Evidence Recorded Time: 01.05 P.M. to 01.36 P.M | | |

**3 முதல் 6 மற்றும் 8 பிரதிவாதிகள் தரப்பில் குறுக்கு விசாரணை தொடர்ச்சி :-**

நான் பத்தாம் வகுப்பு வரை படித்துள்ளேன், ஆங்கிலத்தில் கையெழுத்து போடமாட்டேன். வா.சா.ஆ.4 வழக்கறிஞர் அறிவிப்பில் எந்த தேதியில் சார் பதிவாளர் அலுவலகத்தில் காத்திருப்பதாக கூறியிருந்தேன் என்றால் 22.09.2014 என்று தேதி குறிப்பிட்டிருந்தேன். 1ம் பிரதிவாதி சேது 22.09.2014-ம் தேதி சார்பதிவாளர் அலுவலகத்திற்கு வந்தாரா என்றால் வரவில்லை. 1ம் பிரதிவாதி நான் அனுப்பிய வழக்கறிஞர் அறிவிப்பிற்கு பதில் அறிவிப்பு அனுப்பவில்லை. 2 முதல் 8 பிரதிவாதிகள் தரப்பில் பதில் அறிவிப்பு அனுப்பினார்களா என்றால் அனுப்பினார்கள். வில்லங்க சான்றிதழை தாக்கல் செய்துள்ளேனா என்றால் இல்லை. எனது தரப்பில் எத்தனை ஆவணங்கள் தாக்கல் செய்துள்ளேன் என்ற விவரம் தெரியுமா என்றால் தற்போது நினைவில்லை. வா.சா.ஆ.7 ஆவணத்தை எனது தரப்பில் தாக்கல் செய்துள்ளேன் என்றாலும், அதில் தானசெட்டில்மெண்ட் பதிவும், பவர் ரத்து செய்த பதிவும் உள்ளது என்றால் சரிதான். பவரை ரத்து செய்த பிறகு எவ்வளவு நாட்கள் கழித்து தானசெட்டில்மெண்ட் எழுதப்பட்டது என்றால் ஒரு மாதத்திற்குள் எழுதப்பட்டது. தானசெட்டில்மெண்ட் எழுதப்பட்ட பிறகு நான் எவ்வளவு நாட்கள் கழித்து அறிவிப்பு கொடுத்தேன் என்றால் 1 1/2 ஆண்டுகள் கழித்து கொடுத்தேன். வழக்கறிஞர் அறிவிப்பு அனுப்பிய பிறகு பிரதிவாதிகள் எவ்வளவு நாட்கள் கழித்து பதில் அறிவிப்பு அனுப்பினார்கள் என்றால் சரியாக நினைவில்லை. பதில் அறிவிப்பிற்கு நான் மறு அறிவிப்பு அனுப்பினேனா என்றால் இல்லை. தங்கராஜ் இறந்தது எனக்கு எப்போது தெரியும் என்றால் 13.09.2014-ம் தேதியில் வழக்கறிஞர் திருமதி.கவிதா மூலம் அறிவிப்பு அனுப்பி அந்த அறிவிப்பு திரும்பிய போதுதான் எனக்கு தெரியும். நான் மேற்படி அறிவிப்பு அனுப்புவதற்கு முன்பு எந்த அறிவிப்பு அனுப்பவில்லை. ஓமலூர் வழக்கறிஞர் திரு.கே.பழனிசாமி மூலமாக 07.11.2013-ம் தேதியில் அறிவிப்பு அ

அனுப்பினேனா என்றால் நினைவில்லை. 07.11.2013–ல் நான் ஓமலூர் வழக்கறிஞர் திரு.கே.பழனிசாமி மூலமாக கமலா, சேகர், ரத்தினம், இறந்துபோன தங்கராஜ் மனைவி பூங்கொடி, செல்வராஜ், குமார் ஆகியோருக்கு அறிவிப்பு அனுப்பியுள்ளேன் என்றாலும், என்னிடம் காட்டப்படும் அறிவிப்பில் உள்ள கையெழுத்து என்னுடையதுதான் என்றாலும் சரிதான். <u>மேற்படி வழக்கறிஞர் அறிவிப்பு பி.வா.சா.ஆ.1 ஆகும்.</u> மேற்படி வழக்கறிஞர் அறிவிப்பு அனுப்பிய விவரத்தை 13.09.2014–ம் தேதி அனுப்பிய அறிவிப்பில் சொல்லவில்லை என்றால் சரிதான். மேற்படி விவரத்தை என்னுடைய வழக்குரையிலும், வழக்கு மூலத்திலும் சொல்லவில்லை என்றாலும் சரிதான். 07.11.2013–ம் தேதியில் அனுப்பிய வழக்கறிஞர் அறிவிப்பை வழக்கில் எதற்காக சொல்லவில்லை என்றால் சரியாக நினைவில்லை என்பதால் சொல்லவில்லை. பொது அதிகார பத்திரத்தில் 2வது பக்கத்தில் கடைசி இரண்டு வரியில் " நாங்கள் திரும்பும் வரை அமலில் இருக்கவேண்டியது" என்ற வாசகம் உள்ளது என்றால் சரிதான். வா.சா.ஆ.3 விற்பனை உடன்படிக்கை பத்திரத்தில் 2ம் பக்கத்தில் கடைசி நான்கு வரிகளில் " அதனால் 1ம் நபருக்கு ஏற்படும் கஷ்ட நஷ்டங்களுக்கும், செலவுகளுக்கும் 2ம் நபரே பொறுப்புஎன்று இதன் மூலம் உடன்படுகிறார்கள்" என்று காணப்படுகிறது என்றால் சரிதான். வா.சா.ஆ.3 2ம் நபர் எனக்குறிப்பிடப்பட்டுள்ளது இந்த தாவாவின் 1ம் பிரதிவாதி என்றால் சரிதான். நான் 1ம் பிரதிவாதியிடம் கொடுத்த பணத்தை திரும்ப பெற்றுக்கொடுக்கும்படி இந்த வழக்கில் பரிகாரம் கோரியுள்ளேனா என்றால் இல்லை. 1ம் பிரதிவாதிதான் பொறுப்பு என்று தெரிந்து கொண்டு நான் தான்செட்டில்மெண்ட் பத்திரம் செல்லாது, பவர் ரத்து பத்திரம் செல்லாது என்று கோரியுள்ளேன் என்றால் சரியல்ல. 1–ம் பிரதிவாதி உடன் சேர்ந்து கொண்டு சொத்தை அபகரிக்கவேண்டும் என்ற எண்ணத்தில்தான் இந்த வழக்கை தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரியல்ல. வா.சா.ஆ.8 பவர் ரத்து பத்திரத்தை என்ன காரணத்திற்காக ரத்து செய்துள்ளார்கள் என்று படித்து பார்த்து தெரிந்து கொண்டேனா என்றால் சரியாக நினைவில்லை. வா.சா.ஆ.8 ஆவணத்தில் 3வது பத்தியில் எங்கள் ஏஜெண்டாக செயல்பட்ட சேட்டு என்பவர் மீது நாங்கள் நம்பிக்கை இழந்த காரணத்தினாலும், சரியாக செயல் படவில்லை என்று நாங்கள் கருதுவதாலும் மேற்படி நபரை நாங்கள் நீக்குவது என்று முடிவு செய்துள்ளோம் என்று குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் சரிதான். மேற்படி பொது

அதிகார பத்திரத்தில் அந்த உரிமையானது நாங்கள் விரும்பும்வரை அமலில் இருக்கவேண்டியது என்ற உரிமை தக்கவைத்துக் கொள்ளப்பட்டது என்று காணப்படுகிறது என்றால் சரிதான். சொத்து கமலாவின் தனிப்பட்ட சொத்து என்றால் சரிதான். சொத்தின் முழு உரிமையாளர் என்ற உரிமையின் படி கமலா தனது பேரனுக்கு தானசெட்டில்மெண்ட் பத்திரம் எழுதி வைத்துள்ளார் என்றால் சரியல்ல.

(வழக்கறிஞர் வேண்டுகோளின் பேரில் குறுக்கு விசாரணை தொடர்ச்சிக்காக ஒத்திவைக்கப்படுகிறது)

ஒம்/–PW1,

இதில் கண்ட சங்கதிகள் என் முன்னிலையில் சாட்சியிடம் படித்துக் காண்பிக்கப்பட்டு அவரால் சரியென ஒப்புக்கொள்ளப்பட்டு என் முன்னிலையில் கையொப்பம் /கைரேகை செய்தார்.

ஒம்/–S.முத்துராமன்,
சார்பு நீதிபதி, மேட்டுர்.